தாய்மொழி - தமிழ்

# எழுத்துத் திறன்களை வளர்த்தல்




ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி

1211108

| | |
|---|---|
| பாடப்பதிப்பாசிரியர்கள் | ம. செ. அலெக்சாந்தர்<br>வே. சுப்பிரமணியம் (முல்லை மணி)<br>கே. நடேசன்<br>எஸ். சோதிப்பெருமாள்<br>முருகு இரத்தினம் |
| படங்கள் | பி. பிலப்பிட்டிய |
| தளக்கோலம் : | ஏ. சிவராஜா |
| மேற்பார்வை : | கே. ஏ. பியதிஸ்ஸ<br>ஆர். பி. ஏ. ஜயசேகர |
| பணிப்பு : | கலாநிதி எஸ். டி. லயனல் அமரகுணசேகர |

# எழுத்துத் திறன்களை வளர்த்தல்

தொலைக் கல்வித் துறை
தேசியக் கல்வி நிறுவகம்

| | |
|---|---|
| ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி | 12 |
| தாய்மொழி — தமிழ் | 1211 |
| எழுத்துத் திறன்களை வளர்த்தல் | 121108 |

பொருளடக்கம்


0.0 அறிமுகம் ..........

1.0 குறிக்கோள்கள் ..........

2.0 முற்சோதனை ..........

பகுதி I

3.0 எழுத்துக்கான முன் ஆயத்தம் .......... 4

பகுதி II

4.0 எழுத்துத்திறன்களை வளர்த்தல் .......... 13

பகுதி III

5.0 ஆக்க எழுத்துத்திறன்களை வளர்த்தல் .......... 16

பகுதி IV

6.0 எழுத்து மொழியைத் திருத்தம் செய்தல் .......... 20

பகுதி V

7.0 எழுத்து மொழியில் ஏற்படும் பிரச்சினைகளும் பரிகாரக் கற்பித்தலும் .......... 21

8.0 பொழிப்பு .......... 22

9.0 பிற்சோதனை .......... 23

10.0 ஒப்படை .......... 25

11.0 விடைகள் .......... 25

12.0 உசாத்துணை நூல்கள் .......... 25



© 1991—தேசியக் கல்வி நிறுவகம்



பதிப்பு 1:2

## 0.0 அறிமுகம்



கேட்டல், பேசுதல், ஆகிய மொழித்திறன்களைக் கற்ற உங்களுக்குக் எழுதுதலைப் பற்றிச் சில ஆலோசனைகள் கூறுவது இந்த மொடியூலின் நோக்கமாகும். எழுத்து என்பது நாங்கள் உச்சரிக்கும் ஒலிகளைப் பார்க்கக் கூடிய வாசிக்கக் கூடிய விதத்தில் வரிவடிவங்களைக் கொண்டதாகும். ஒலி வடிவத்துக்கு வரிவடிவம் கொடுப்பது எழுத்து எனப்படும். நாங்கள் பேசும் சொற்களை எழுதிக் காட்டுவதற்காக அமைக்கப்பட்ட எழுத்து அட்டவணை ஒன்று எம்மிடம் உண்டு. அதை அரிச்சுவடி எனக் குறிப்பிடுவோம். அரிச்சுவடி மொழியின் அபிவிருத்தியுடன் படிப்படியாக அமைக்கப்பட்டதாகும்.

ஏதாவதொரு மொழி எழுத்து மொழியைக் கொண்டதாயின் அது உலகில் நிலைநிற்கும். அம்மொழி வாழ்வதற்கு முக்கிய காரணம் அதன் எழுத்து முறையாகும். விஞ்ஞான, தொழில்நுட்ப, தத்துவ, கலை அம்சங்கள் போன்றவற்றை ஒரு பரம்பரையிலிருந்து அடுத்த பரம்பரைக்கு அளிக்கும் ஊடகம் எழுத்து மொழியாகும். ஆகையால் எழுத்துத்திறன்களை வளர்ப்பது முறையான கல்விச் செயற்பாடுகளில் முக்கிய இடத்தை வகிக்கும்.

## 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூல் மூலம் கீழ்க்காணும் குறிக்கோள்களை நீங்கள் அடைய வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

★ சிறந்த எழுத்து மொழியின் அம்சங்களை இனங்காணல்.

★ ஆரம்ப வகுப்பு மாணவர்களின் எழுதும் இயல்புகளை வளர்ப்பதற்காகத் தேவைப்படும் முக்கிய விடயங்களை அறிந்து கொள்ளல்.

★ இவற்றில் பின்பற்ற வேண்டிய பலவித செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் இயல்புகளை அறிதல்.

★ எழுத்து மொழியிலான ஆக்கங்களைத்திருத்துதல் பற்றிய ஆசிரியரின் செயற்பாடுகளும் மனப்பாங்குகளும்.

★ எழுத்தைக் கற்பிக்கும் போது உண்டாகும். பலவித பிரச்சினைகளை விளங்கிக் கொண்டு அவற்றுக்குரிய பரிகாரங்களைக் காணும் இயல்பு.

## 2 0 முற்சோதனை

எழுத்துத்திறன்கள் பற்றிய உங்களது முன்அறிவை பரிசோதிப்பது இதன் நோக்கமாகும்.

கீழ்க்காணும் கூற்றுக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் கூட்டுக்குள் இடுக.

1 முன்னேற்றமடைந்த சகல மொழிகளிலும் எழுத்து (வரிவடிவம்) அல்லது சொல்லின் குறியீட்டு முறையொன்று இருக்கும். ( )

2 ஒலி வடிவங்கள் உண்டாகிய பின்... வரிவடிவங்கள் அமைக்கப்பட்டன. ...

3 அறிவைப் பகிர்ந்து கொள்வதில் பே... எழுத்து நிலையான முறையாகும். ( )

4 எழுத்துக்களை எழுதிப் பழகுவதால் இயல்பாகவே எழுதும் திறன் ஏற்படுகிறது. ( )

5 சிந்திக்கும் திறன் ஆக்கத்திற்கு வழி வகுக்கும். ( )

6 எழுதுதலில் பிரச்சினைகள் உள்ள பிள்ளைகள் ஆரம்ப பாடசாலைகளில் இருக்கக் கூடும். ( )

7 மொழி ஆக்க இயல்புகள் சிறு வயதிலிருந்தே பிள்ளைகளிடம் காணப்படும். ( )

8 ஏதாவதோர் எழுத்தமைப்பு பூரணமடைவதற்கு அவற்றில் ஆக்கத் தன்மையும், இலக்கண அமைவும் இருக்க வேண்டும். ( )

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

பகுதி i

## 3.0 எழுத்துக்கான முன் ஆயத்தம்

எழுத்துக்கான முன் ஆயத்தம் என்ன என்பதை ஆராய்வோம். பேச்சிலும் ஒரு அளவான பயிற்சியுடன் பாடசாலைக்கு வரும் பிள்ளை வாசித்தல் பற்றிய திறன்களை அங்கே வளர்த்துக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாடசாலைகளாலும் பெற்றோர்களின் வழிகாட்டல் களாலும் வாசிக்கவும், எழுதவும் தேவையான ஆரம்பப் பயிற்சி ஒன்றைப் பெற்றுக் கொண்டு பாடசாலைக்கு வரும் குழந்தைகளும் இருப்பார்கள்.

சகல பிள்ளைகளுக்கும் எழுத்துக்கான ஆரம்ப ஊக்கு வித்தல்களும் எழுத்துக்கான முன் ஆயத்தமும் தேவை என்பதை கண்டுள்ளோம். எழுத்துக்கான அவயவங் கள் முறைப்படி ஆறுதலாகவும் புரிந்துணர்வோடும் நிரந்தரமாக பயிற்றப்பட வேண்டும். அசைவுத் திறன் களால் பிள்ளைக்கு எழுத்துகளை எழுத விரைவில் பயிற்சி அளிக்க முடியுமென்பது ஏற்றுக் கொள்ளப்படாத கருத்தாகும். சில பெற்றோர்களைப் போல் சில ஆசிரியர் களும் போட்டி முறையில், தமது பிள்ளைகளுக்கு விரை வாக எழுத்துப் பயிற்சியை ஏற்படுத்தும் நோக்கத் துடன் பேனை பென்சில் புத்தகங்களைப் பெற்றுக் கொடுத்து அவற்றில் ஈடுபடுத்துகிறார்கள். இயலாத கட்டத்தில் தண்டனைகளையும் வழங்குகிறார்கள். இது போன்ற செயல்கள் எழுத்துக்கு ஊக்குவிப்பதை விட வெறுப்படைவதற்குக் காரணமாகிறது.



எழுத வேண்டும் என்ற தேவை பிள்ளையின் வளர்ச்சி யுடன் படிப்படியாக உண்டாகும் ஒரு செயலாகும். மூன்றும் நாலாம் வயதுகளில் பிள்ளை கரித்துண்டுகளால் அல்லது வெண்கட்டிகளால் கோடுகள் இடுவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். எழுத இருக்கும் ஆர்வத்தால் அவர் கள் இப்படிப்பட்ட கிறுக்குதல்களால் வீட்டின் அழகு மங்கி விடும் என்று நினைக்கும் சில பெற்றோர்கள் பிள்ளை களை எச்சரிப்புகளால் பிள்ளைகளிடம் உளத்தாக்கம் ஏற்படும்.



சிறு பராயத்தில் கரியால் அல்லது வெண்கட்டிகளால் கீறுவதற்கு ஊக்கம் எடுக்கும் பிள்ளையைத் தடை செய் வதற்குப் பதிலாகப் பொருத்தமான கரும்பலகையை அல்லது கடதாசி போன்ற உபகரணம் ஒன்றைக் கொடுத்து உதவி புரிவது பொருத்தமாக இருக்கும். எழுதுதலின் போது அதற்குரிய அவயவப் பகுதிகளைச் சரியான முறையில் ஆள்வது சிறு பிள்ளைக்குக் கஷ்ட மாக இருக்கும். எழுதும் உபகரணத்தைச் சரியான முறையில் பிடித்துக் கொள்ளல், கையையும் விரல்களை யும் ஆளுதல் எழுத்தின் வடிவத்தையோ அளவையோ கவனித்துக் கொள்ளல், எழுதும் போது இருந்து எழுதும் நிலைகளைச சரியான முறையில் அமைத்துக் கொள்ளல் என்பன சிரமமாயிருக்கும். அதிக நேரம் எழுதுதலில் ஈடுபடுவதும் பிள்ளைக்குக் களைப்பாக இருக்கும்.

பிள்ளையை எழுதுதற்கு ஆயத்தம் செய்வதற்காக உறுப் புகளை அமைக்கும் பயிற்சிகள் மிக முக்கியம். விரல்களி லும் கைகளிலும் உள்ள தசை நார்களை ஏற்றபடி


வசப்படுத்துவதற்காகச் செய்து கொள்ளக் கூடிய உறுப்புகளை அசைக்கும் சில செயற்பாடுகள் கீழே உள்ளன.



- விளையாட்டுப் பொருட்களைக் கையாள்தல்.
- களிமண்ணைப் பிசைந்து உருவங்களை ஆக்குதல்.
- கத்தரிக்கோலினால் படங்களை வெட்டுதலும் கடதாசியை குஞ்சங்களாக வெட்டுதலும்,
- பாவைகளுக்கு உடையணிதல்.
- கரும்பலகையில் படம் வரைத
- மண்தட்டுகளில் கீறுதல்.
- தொலைபேசி எண்களைச் சுழற்றுதல்.
- மேசைகளை ஒழுங்கு செய்தல்.

ஓடுதல், பாய்தல், போன்ற விளையாட்டுகளில் உண்டாகும் அசைவுகளால் வீட்டில் இது போன்ற பயிற்சிகளை இயல்பாகவே பிள்ளை, பெற்றுக் கொண்டாலும் ஒழுங்கு முறையான செயற்திட்டமொன்றை பாடசாலையிலும் ஏற்படுத்த வேண்டும். எழுத்து ஆரம்பிப்பதற்கு முன்பு சுவர்க்கரும்பலகையில் படங்களை வரைதல் கிறுக்குதல் ஆகியவைகளுக்கும் இடமளித்தல் நன்று. இலகுவாக அழித்து விட வும் ம்ண்டும் மீண்டும் கீறுவதற்கும் பெரிய படங்களை வரைவதற்கும் சுவர்க்கரும்பலகை ஏற்றதாக இருக்கும். எழுதும் உபகரணங்களை கையாளுவதற்கு பயிற்சியளிப்பதும் இந்தச் செயல்கள் மூலம் செய்யலாம்.

எழுதக் கற்பித்தலில் ஆரம்பப் பருவத்தின் போது மேற்கொள்ளக்கூடிய ஆரம்ப முன்னெழுத்துப் பயிற்சிகள் சில கீழே தரப்பட்டுள்ளன,



நீங்கள் மேற்கொள்ளும் இவை போன்ற ஆரம்ப முன் எழுத்துப் பயிற்சிகள் படிப்படியாக வளர்ச்சியுறும் விதத்தில் அமைத்துக் கொள்ளுங்கள்.


இதைவிட முகங்கள், மாலைகள், கனிகள், காய், பூ, தொப்பி ஆகியவையும் கீறச் செய்வது மாணவர்களுக்கும் விருப்பந்தரும் பயிற்சிகளாக இருக்கும்.

எழுத்துக்களிலுள்ள சிறிய வேறுபாடுகளை இனங்காணுவது பிள்ளைக்கு ஆரம்பத்தில் கடினமாக இருக்கும். எழுத்துக்குரிய வடிவம் ஒரெழுத்துக்கும் இன்னொரு எழுத்துக்குமிடையேயுள்ள வேறுபாடுகள் போன்ற அம்சங்களை இலகுவாக விளங்கிக் கொள்ள இது போன்ற பயிற்சிகள் மூலம் முன்னெழுத்துப் பயிற்சி பெறச் செய்வதால் ஏற்படும். வேறுபாடுகளை இனங்காணும் செயற்பாடுகள் காட்சிப்பண்பு பிரித்தறிதல் எனக் குறிப் பிடப்படுகின்றது

டபயம், நத, முழு போன்ற எழுத்துக்களிலுள்ள மாற்றங்களை இலகுவாக விளங்கிக் கொள்வதற்காகப் பண்பு பிரித்தறிதல் அப்பியாசங்களை கொடுக்கலாம்.

இந்த உதாரணத்தைப் பாருங்கள். முதல் பகுதியில் உள்ள படத்திற்குப் பொருத்தமான படத்தை இரண்டாம் பகுதியிலிருந்து தெரியுங்கள்.


முதற்பகுதி இரண்டாம் பகுதி



எழுத்துகளை இனங்காணக் கூடியதாக பெரிய எழுத்தில் எழுதிய சொல் அட்டைகளை எப்பொழுதும் காணக் கூடியதாக வகுப்பறையில் தொங்க விடுவது பிரயோசனமானது. சொற்களை நினைவில் கொண்டு வரவும் அவைகளை இனங்காணவும் வாசிக்கவும் இலகுவாக இருக்கும்.


தெளிவான வர்ணங்களால் கரும்பலகையில் பெரிய எழுத்துக்களில் எழுதிக் காட்டுவதால் பிள்ளைகளிடம் எழுத்தில் ஒரு ஆர்வம் உண்டாகும். எழுத்து எழுத ஆரம்பிக்க முன்பு எழுத்துக்களின் வடிவங்களை விம்பமாக உள்ளத்தில் மனப்பதிவு ஏற்படுத்துவது அவசியம் ஆகையால் எழுத்துகளைத் தெளிவாகவும் பெரிதாகவும் எழுத வேண்டும். மொழி எண்ணக்கரு ஆக்கம் பற்றிய மொடியூலில் நீங்கள் கற்ற விடயங்களை நினைவுபடுத்தவும் "கதிரை" என்னும் வீட்டுப்பொருளைப் பிள்ளை இனங்கண்டு கொள்வதும் அதை ஏனைய வீட்டுப் பொருட்களிலிருந்து வேறுபடுத்தி இனங்கண்டு கொள்

உதாரணம்




3"×4"

கொள்வதும் அறிவினுலும் அவற்றை உபயோகிக்கும் பயிற்சியினுலுமாகும் என்பதை நினைவு கூருங்கள். ''அ'' என்பது ஏதோ ஒரு எழுத்து என்பதை பிள்ளை விளங்கிக் கொள்வதும் நாங்கள் அப்படிக் கூறுவதாலே யேயாகும். அம்மா என்ற சொல்லை பேச்சின் போது உபயோகித்த பிள்ளை அதை எழுதி இருக்கும் விதத்தை கண்ட போது பேசுவதையே எழுதிக் காட்ட முடியும் என்பதை விளங்கிக் கொள்ளும். எழுதிய சொற்களை அடிக்கடி காணும் போது அ........ ம் ........மா என்று வாசிக்கும் போதும் எழுதிய சொல்லின் மேல் திரும்ப எழுதும் போதும் எழுத்தைப் பற்றி ... உண்டாகும். இப்படி எழுதுவதின் தே... கிக் கொண்ட பிள்ளை சுயவிருப்பத்துட... காட்டுவார். இவற்றில் நீங்கள் நிறை... முக்கிய செயல் என்னவென்றுல் மேற்கூ... திற்கு வசதியளிக்கும். பல சூழல்களிலுமிருந்து... கள் பாடசாலைக்கு வருவார்கள். எந்தவொரு நிலைய... வரும் பிள்ளைக்கும் பொருத்தமாகும் விதத்தில் ஏனைய மொழிச் செயற்பாடுகளுடன் எழுத்துக்குப் பொருத்தமான சூழலை அமைத்தால் பிள்ளை எழுதுவதற்கு ஆர்வம் கொள்வான்.




பிள்ளையை எழுத்துக்கு ஆயத்தம் செய்த பின்பு பிள்ளை எழுத ஆரம்பிக்கலாம். கரும்பலகையில் வரைதல், விரும்பியவாறு கீறுதல் ஆகியவற்றுக்குப் பின்னர் முறையாகக் கடதாசியில் எழுதச் செய்யுங்கள். கோடிடப் படாத கடதாசி மிகப் பொருத்தமாக இருக்கும். இலகுவாக எழுதக்கூடிய நிறப் பென்சில்கள் வர்ணச் ''சோக்குகள்'' போன்றவைகளை உபயோகியுங்கள். அந்தப் பொருட்களை கைவிரல் நுனிகளால் பிடிக்கும் விதத்தைப் பற்றிக் கவனம் செலுத்துங்கள். சில பிள்ளைகள் இயல்பாகவே இடது கையால் எழுதும் பழக்கம் உடையவர்களாகக் காணப்படுவர். இடக்கையால் எழுதுவதால், வேகத்திலோ, வடிவத்திலோ பாதிப்பு ஏற்படுவதில்லை. அதை மாற்ற எத்தனிக்கத் தேவையில்லை.

கடதாசியில் எழுதுவதற்கு உதவியாகத் தெளிவாக எழுதப்பட்ட சொல்லட்டைகளை தயாரித்துக் கொள்ளலாம். சுயமாக எழுதும் ஆற்றலைப் பெறும் வரை பார்த்தெழுதும் பயிற்சியளிக்கலாம். எழுதுதல் பிள்ளையை விரைவில் களைப்படையச் செய்வதால் சிறிது நேரத்திற்கு மாத்திரம் எழுத்துப் பயிற்சி அளிக்க வேண்டும்.



பிள்ளை ஆசனத்தில் சரியாக இருக்கும் நிலையைப் பழக்குதல்

முறையாக எழுத ஆரம்பிக்கும் போது பிள்ளை ஆசனத்தில் இருக்கும் நிலையைப் பழக்க வேண்டும். மேசைக்குமேல் வைத்து எழுதும்போது முதுகை நேராக வைத்துக் கொள்ளுவதும் முழங்கையை மேசைக்கு வெளியால் வைத்திருப்பதும் உடலின் மேற்பகுதியை மேசையில் முட்டாத வண்ணம் வைத்திருப்பதும் நல்ல ஒழுங்கு முறையெனக் கருதப்படுகிறது. ஆரம்ப வகுப்

புக்களில் பிள்ளைகள் கடதாசிக்குக் கிட்டத் தலை சாய்த்துக் கொண்டு எழுதுவதை அவதானிக்கலாம். அப்படிப்பட்ட ஒழுங்கீனங்களை அகற்றிக் கொள்ள ஆரம்பத்திலிருந்தே ஆசிரியர் கவனமெடுக்க வேண்டும்.

எழுத்துக்களை எழுதும் போது அரிச்சுவடியின் எழுத்துக்களை வரிக்கிரமமாகப் எழுதப் பயிற்றத் தேவையில்லை. எழுத்துக்கு ஆயத்தம் செய்யும் பயிற்சிகளின் போது பெற்றுக் கொடுத்த அசைவு இயல்புகளுக்கு மிகவும் கிட்டிய எழுத்தில் தொடங்கிப் படிப்படியாக அ, ஆ போன்ற எழுத்துகளை எழுதுவது பொருத்தமானதாகும்

இவற்றில் பின்பற்றக் கூடிய ஒரு எழுத்து முறையைக் காட்டலாம். இலகுவாக எழுதக்கூடிய எழுத்துக்களை ஆரம்பிக்கலாம்.

இலகுவான எழுத்துக்கள் - ஆரமபம்

ட ப ய ம ழ

ஈ ர ந ங க ச

எ ஏ ஞ ஒ

ள வ ல ன ண

அரவுடன் கூடிய எழுத்துக்கள்

டா பா யா மா ழா

ரா நா கா சா ஞா

ளா வா லா ளு ணு

உகரக்குறியுடன் எழுதுதல்

பு சு யு டு மு ழு

நு கு து று

இகரத்தைக் குறிக்கும் விசிறி

கி சி டி தி பி றி

ளி வி லி னி ணி

ஈகரத்தைக் குறிக்கும் நெடுவிசிறி

கீ சீ டீ தீ பீ றீ

ளீ வீ லீ னீ ணீ

ஊவுடன் கூடிய உயிர்மெய்

கூ சூ டூ தூ றூ

பூ யூ மூ ழூ ணூ

ஒற்றைக் கொம்பு சேர்த்து எழுதுதல்.

டெ பெ யெ மெ ழெ

கெ செ தெ றெ

ளெ வெ லெ னெ

இரட்டைக் கொம்பு சேர்த்து எழு

டே பே யே மே ழே

நே கே சே

ஞே ளே வே

ணே னே

ஒற்றைக் கொம்பும் அரவும் சேர்தது எழுதுதல்.

டொ பொ யொ மொ ழொ

நொ கொ சொ

ளொ வொ லொ ஞொ

புள்ளியுடன் சேர்ந்த எழுத்துக்கள்.

க் ங் ச் ஞ் ட் ண்

த் ந் ப் ம் ய் ர்

ல் வ் ழ் ள் ற் ன்

இரட்டைக் கொம்பும் அரவும் சேர்ந்த எழுத்துக்கள்.

கோ சோ ஞோ ணோ

தோ நோ மோ யோ

லோ வோ ழோ றோ

உயிர் எழுத்துக்கள்

அ ஆ இ ஈ

உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ ஔ ஃ

உயிர் மெய் எழுத்துக்கள்.

க கா கி கீ

கு கூ கெ கே

கை கொ கோ கௌ

ஔகார எழுத்துக்கள்.


கௌ ஙௌ சௌ போல்வன.

இப்படி உயிர்க் குறிகள் இல்லா எழுத்துகளையும் உயிர்க் குறிகள் உள்ள எழுத்துக்களையும் சொற்களையும் படிப் படியாக எழுதப் பயிற்றலாம்.

பேச்சுடனும் வாசித்தலுடனும் எழுத்தையும் முன்னேற்ற வேண்டியிருப்பதால் வாசிப்பதற்காகத் தயாரித்த அட்டைகளை எழுத்துக்கும் உபயோகிக்கலாம். இப்படி எழுதுவதற்கு ஆயத்தங்கள் செய்தலும் எழுதுதலை ஆரம்பித்தலும் அந்தந்தப் பிள்ளையின் உளமாற்றங்களுக்கும் சூழற் காரணிகளின் வேறுபட்ட தன்மைகளுக்கும் பொருத்தமான முறையில் ஒழுங்குகளைச் செய்யும் சுதந்திரம் உங்களுக்கு இருப்பதால் இந்த விடயங்களை கவனத்திற் கொண்டு எழுதுவதற்குப் பிள்ளைகளை ஆயத்தம் செய்தல் நன்று.

**செயற்பாடு 1** எழுத்து முன் ஆயத்தத்தைப் பற்றி நீங்கள் கற்றவற்றை உறுதிப்படுத்த இந்தச் செயற்பாட்டைச் செய்யுங்கள்.

இங்கே குறிப்பிடும் எழுத்துச் செயற்பாடுகளை உபயோகித்துக் கொள்ளும் படிமுறையை கீழ்க்காணும் இலக்கங்களில் எழுதுங்கள்.



1 .......................... 6 ..........................

2 .......................... 7 ..........................

3 .......................... 8 ..........................

4 .......................... 9 ..........................

5 .......................... 10 ..........................

**செவ்வை பார்த்தல் 1**

கீழ்க்காணும் கூற்றுக்கள் சரியாயின் ... பிழையாயின் × எனவும் கூட்டிற் ... மிடுக

1 எழுத்து ஒரு அசைவுத் திறனாகும் ( )

2 கோடிடுதலும் கிறுக்குதலும் பிள்ளை எழுத ஆரம்பிக்க முந்திய நிலையாகும். ( )

3 எழுத்துக்களை எழுதப் பயிலும் போது இலகுவான எழுத்தில் தொடங்கிப் படிப் படியாகக் கஷ்டமான எழுத்துக்குச் செல்ல வேண்டும். ( )

4 காட்சிப் பண்பு பிரித்தறிதல் இயல்புக்காக எழுத்து முன்பயிற்சிகள் மிகவும் உபயோக மானவை. ( )

5 சிறிய எழுத்துகள் சிறு பிள்ளைகளுக்கு மிக விரைவில் மனத்தில் பதியும். ( )

6 எழுதுவதற்கு ஆரம்பப் பருவத்தில் மிகப் பொருத்தமானது கோடற்ற கடதாசியாகும். ( )

7 எழுத்துப் பயிற்சியளிக்கும் ஆரம்பப் பரு வத்தில் இலகுவாக எழுதக்கூடிய பொருள் ஒன்றைக் கொடுக்க வேண்டும். ( )

8 சொற்களை எழுதிய படங்களை வகுப்பறை யில் தொங்க விடுவதால் மனப்பதிவு ஏற் படும். ( )

9 எழுதுதலின்போது பிள்ளை அமர்ந்திருக்கும் முறையைக் கவனிக்க வேண்டும். ( )

10 இடக்கையால் எழுதும் பிள்ளைக்கு வலது கையால் எழுதச் சொல்லிக் கட்டாயப் படுத்துவது பொருத்தமானது. ( )

**உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.**

# 4.0 எழுத்துத் திறன்களை வளர்த்தல்

எழுதும் திறன்கள் பொறிமுறை என்றும் ஆக்கம் என்றும் இருவகைப்படும்.

## எழுத்தின் பொறி முறைத் திறனை வளர்த்தல்



எழுத்தின் பொறிமுறைத் திறன் என்பது கைவிரல்கள், கண், மூளை போன்ற உறுப்புகளைச் சாரும்.

எழுத்துக்காகப் பயிற்சியளித்தலில் ஆரம்ப கீழ் வகுப்புகளில் எழுதும் பொறிமுறைத் திறன்களை வளர்ப்பதில் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும். பிள்ளை பாடசாலைக்கு வந்த நாளிலிருந்து இதற்கு வழி காட்ட வேண்டும். ஆரம்ப பருவத்தின் போது பிள்ளை எழுதும் எழுத்துகளின் அளவைப் பற்றி போதியளவு கவனமெடுக்காவிடினும் எழுத்துக்களின் வடிவத்தைப் பற்றிக் கவனமெடுக்க வேண்டும்.

- எழுத்தின் பொறிமுறைத்திறன்கள் கீழே தரப்படுகின்றன.
- எழுத்துக்களின் சம அளவு
- எழுத்துக்கும் எழுத்துக்கும் உள்ள இடைத் தூரமும் சொல்லுக்கும் சொல்லுக்கும் உள்ள இடைத் தூரமுமாகும்.
- கோட்டிற்கு மேல் எழுதுதல்.
- எழுத்துகளிலுள்ள குற்று, விசிறி, அரவு போன்றவைகளை உபயோகித்தல்.
- எழுத்துகளின் வடிவத்தை மாறாது எழுதுதல்
- முழுமையான எழுத்துகளை எழுதுதல்.
- தூய்மையாக எழுதுதல்.
- வேகமாக எழுதுதல்.
- ஒலி வேறுபாடுகளைக் கவனித்து எழுத்துக்களைப் பிழையின்றி எழுதுதல்.
- குறியீடுகளை உபயோகித்தல்
- சொற்களைப் பிரித்தல்
- மரபுக்கமைய எழுதுதல்

இவைகளை உதாரணங்கள் மூலம் ஆராய்வோம் எழுத்துக்கள் இலகுவாக மனதில் பதிவதற்கு ஆரம்பத்தில் பெரிய எழுத்துக்களாக எழுத வேண்டும். பிள்ளையின் வளர்ச்சியுடன் எழுத்துக்களின் பருமனைக் குறைத்துக் கொள்ளலாம். கரும்பலகையில் ஒரு சதுரக் கோட்டுக்குள் எழுதும் பகுதிகளை மாணவனின் புத்தகத்தில் ஒரு பக்கத்தில எழுதச் செய்வதால் அல்லது கோடுகளுள் சொற்களை எழுதச் செய்வதால் எழுத்துக்களின் பருமன் பற்றிய எண்ணக்கருக்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உதாரணம்: 1

## படம்

எழுத்துக்கள் சம அளவைப் பேணுவ... கூடிய மிகப் பிரசித்தமான முறை வரிக் கோடு... இடையில் எழுதலாகும். கீழே தரப்பட்டுள்ள உதா... ணத்தைப் பாருங்கள்.

உதாரணம் :-

டு நி

## பட்டம் விடுவோம்

எழுத்துக்களுக்கிடையிலுள்ள தூரமும் சொற்களுக்கிடையிலுள்ள தூரமும் பற்றிய உணர்வை ஆரம்ப வகுப்புகளில் உண்டாக்க வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் இவைகளைப் பற்றிக் கடுமையாக வற்புறுத்துவது அவ்வளவு பொருத்தமானதன்று. கோடிடப்பட்ட கடதாசியில் எழுத்துக்கள் ஆரம்பித்த பின்பு எழுத்துக்களுக்கிடையேயுள்ள சமமான இடைவெளி சொற்களுக்கிடையே உள்ள இடைவெளி ஆகியவை பற்றி கவனத்தைச் செலுத்தலாம். எழுத்துகளுக்கிடையே உள்ள இடைவெளியும் சொற்களுக்கிடையே உள்ள இடைவெளியும் ஏற்றளவில் இருக்க வேண்டியது பற்றிய விளக்கத்தை ஏற்படுத்தலாம். பிரதி பண்ணலுக்கு வேறு அப்பியாசப் புத்தகத்தை உபயோகிப்பது நன்று. பிரதி பண்ணலுக்குரிய பகுதியை ஆசிரியரே தெரிவு செய்து கொடுப்பது மிகவும் நல்லது.




எழுத்துகளிலுள்ள குற்று, விசிறி, கொம்பு, அரவு ஆகியவற்றைச் சரியான முறையிலிட்டு எழுதுதலைப் பற்றிக் கவனத்தில் கொள்ள வேண்டியது கோட்டில் மேல் எழுத ஆரம்பித்த பின்னரேயாகும்.

எழுத்துகளை அழகாக எழுத ஊக்கம் கொடுக்க வேண்டும். எழுத்துகளின் முழுமையையும் உறுப்பமைவையும் தெளிவையும் தூய்மையையும் எழுதும் போது கவனத்தில் கொள்ள வேண்டும்.

எழுதும் வேகத்தைப் பற்றி கவனத்தைச் செலுத்த வேண்டியது ஆரம்ப மேல் வகுப்புகளிலிருந்தே ஆகும். சொல்வ தெழுதல் இதற்கு உகந்த செயலாகும்.

எழுத்துப் பிழையின்றி எழுதுவதைப் பற்றிய பயிற்சி ஆரம்ப வகுப்புகளிலிருந்தே மேற்கொள்ளப்படவேண்டும். ஆரம்ப மேல் வகுப்புகளில் தமிழ் எழுத்துக்களோடு கலந்து உபயோகிக்கப்படும் வடமொழி எழுத்துக்களைத் தனியாகத் தெரிந்து பயிற்சியளிப்பது சாலச் சிறந்தது. எழுத்துப்பிழை தொடர்பான பிரச்சினைகளை அகற்றுவதற்கு ஆரம்பத்திலிருந்தே, திருத்தமான முறையில் எழுதுவது கவனிக்கப்பட வேண்டும்.

குறியீடுகளை உபயோகித்தல் சொற்களைப் பிரித்தல் மரபு முறைக்கு இணங்க எழுதுதல் பற்றிய விடயங்களை அவற்றிற்காக உள்ள வேறு மொடியூல்களில் கற்கச் சந்தர்ப்பம் அளிக்கப்படலாம்.

## பொழிப்பு

எழுதுதலில் பொறி முறைத் திறன்களை வளர்ப்பதென்பது எழுதுவதற்கு உரிய உறுப்புகளுக்கு உரிய பயிற்சி அளிப்பதாகும்.

பிள்ளை பாடசாலைக்கு பிரவேசித்த நாள் தொடக்கம் எழுத்துப் பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பொறிமுறைத் திறன்களை முன்னேற்ற ஆரம்ப கீழ் வகுப்புகளில் கூடிய கவனத்தைச் செலுத்த வேண்டும்.

எழுத்துப் படிப்படியாக விரிவடையும் செயற்பாடாகையால் பயிற்சியும் படி முறையிற் கொடுக்கப்படல் வேண்டும்.

எழுத்துக்களின் வடிவமும்; அளவும்; உறுப்பமைவும் பற்றிய கருத்து, பொறிமுறைத்திறன் பயிற்சியின் போதே அளிக்கப்பட வேண்டும்.

பயிற்சிகளும், முன்மாதிரிகளும் இவற்றில் முக்கியத்துவம் வகிக்கும்.

**செவ்வை பார்த்தல் 2**

நீங்கள் பெற்றுக்கொண்ட அறிவைக் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையிறுப்பதன் மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

கீழ்க்காணும் கூற்றுக்களின் சரியானவற்றிற்குச் (√) சரி எனவும் பிழையான கூற்றிற்கு (×) பிழை எனவும் உரிய கூட்டினுள் அடையாளம் இடுக.

1 பாடசாலையில் பிரவேசித்த நாள் தொடக்கம் எழுத்துத் திறன்களை வளர்க்கப் பிள்ளைகளை

வளர்க்கப் பிள்ளைகளை ஆரம்பச் செயற்பாடு களில் ஈடுபடுத்த வேண்டும்.

( )

2 உறுப்பமைய எழுதும் திறனைப் படிப்படியாக வளர்க்க வேண்டும்.

( )

3 எழுத்தில் பொறிமுறைத் திறன்களை வளர்ப் பதற்குப் பார்த்தெழுதுதல் ஒரு முறையாகும்.

4 ஆரம்ப எழுத்துப் பயிற்சியில் கோடில்லாத கடதாசிகளைப் பொருத்தமானதாகும்.

5 ன, ண, ர, ற, மு, ழு போன்ற எழுத்துக் களிடையிலுள்ள வேறுபாட்டை அறிந்து எழு தும் இயல்பு ஆரம்ப மேல் வகுப்பு மாணவருக்கு இருக்க வேண்டும்.

( )

6 பிழையின்றி எழுதுவதற்கும் பயிற்சி அளிக்கும் போது ஆசிரியர் முன்மாதிரியாய் இருக்க வேண் டும்.

( )

7 வாசிப்பவர்களுக்குத் தெளிவாகக் கருத்து விளங் கிக் கொள்ளச் சொற்களைப் பிரித்தெழுதுதலும் உரிய முறையில் நிறுத்தக் குறிகளை உபயோகிப் பதும் மிக முக்கியமாகும்.

( )

8 எழுதும் போது சுயமாக சிந்தித்து எழுத ஆரம் பகீழ் வகுப்புகளில் ஊக்குவிக்க வேண்டும்.

( )

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

பகுதி iii

## 5.0 ஆக்க எழுத்துத் திறன்களை வளர்த்தல்.

அடுத்த படியாக ஆக்க எழுத்துத்திறன்களை வளர்த் தல் பற்றிய விடயங்களை ஆராய்வோம். ஆக்கம் என் பதன் கருத்து தனக்கும் ஏனையோருக்கும் புதியதொன்று என்பதே. அவற்றில் ஒரு சுயதன்மை உண்டு. அப்படிப் பட்ட எழுத்து ஆக்கக்கட்டுரைகளெனக் கருதப்படும்.



எழுத்தின் பொறிமுறைத்திறன்கள் வளர்ந்து கொண்டு வரும் போது பிள்ளையை ஆக்க எழுத்துக்கு இட்டுச் செல்லலாம். ஆரம்ப மேல் வகுப்புகளில் இதற்கான கவனத்தைச் செலுத்த வேண்டும். கவிதைகள் பாடல்கள் மாத்திரமல்ல, புதிய வடிவங்களான அழைப்பிதழ்கள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்றவையும் ஆக்க எழுத்துக்களாகக் கருதப்படும். மொழியிலான பலவித ஆக்கங்கள் ஆக்க எழுத்து என்ற பிரிவின் கீழ் அடங்கும். ஆக்க எழுத்தின் போது பிள்ளையின் ஆக்கத்திறன் வெளிப்பட வேண்டும்.

ஆக்க எழுத்தின் பல இலட்சணங்களை அறிந்து கொள்வது உங்களுக்குப் பிரயோசனமாயிருக்கும். அவை போன்ற சில இலட்சணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- யதார்த்தத்தன்மை
- உணர்ச்சி வெளிப்பாடு.
- தனித்துவம்

**யதார்த்தத்தன்மை:-**

யதார்த்தத்தன்மை என்பது ஒரு ஆக்கத்தினுடைய உண்மைத் தன்மையைக் குறிப்பதாகும். ஆயினும் கற்பனை இல்லாத ஆக்கம் என்று கருதலாகாது. மாணவர்களின் ஆக்க முறையிலான எழுத்துகள் அவர்களின் சொந்தப் படைப்புக்களாகும்.

**உணர்ச்சி வெளிப்பாடு**

உணர்ச்சிகளை உண்டாக்கக் கூடிய தன்மையை இவை குறிக்கும். ஒரு ஆக்கம் இரசனையுடையதாக இருக்க வேண்டுமானால் அது உணர்ச்சிக் கலப்புடையதாக இருக்க வேண்டும்.

**தனித்துவம்**

தனித்துவம் என்பது முன்னில்லாத ஒன்று. எழுத்து எதையும் பின்பற்றி எழுதப்பட்டதாக இருத்தல் சிறப்பாகாது. அது எழுத்தாளருடைய சொந்த ஆக்கமாக இருத்தல் வேண்டும் இவற்றில் அவரின் ஆக்கத்திறன் முக்கிய இடத்தை வகிக்கிறது.

இந்தப் பண்புகளைக் கொண்ட ஆக்கங்கள் மூலம் பிள்ளையிடம் மறைந்திருக்கும் திறன்களை இனங்கண்டு அவற்றை விருத்தி செய்ய நடவடிக்கை எடுப்பது உங்களது கடமையாகும்.

ஆக்க எழுத்துக்கான பல உதாரணங்களைப் பார்ப்போம்.



- கவிதைகள், பாடல்கள், நாடகப்பிரதிகள், கதைகள்.
- படங்கள் மூலம் விபரிக்கும் விவரணங்கள்
- அநுபவங்களை எழுதுதல்.
- நாட்குறிப்பு எழுதுதல்.
- நகைச்சுவைக் கதைகள் எழுதுதல்.
- விடுகதைகள்.
- விவேகச் சக்கரங்கள்.
- தலையங்கங்களை இடுதல்.
- விவாதங்களை எழுதுதல்.
- உவமான உவமேயங்களை அமைத்து எழு...
- ஆக்கச் சுவரொட்டிகள் பாராட்டிதழ்கள் பிரசாரப் பத்திரங்கள்.

இவை போன்றவற்றை எழுதுவதற்காகச் சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதும் ஊக்குவிப்பது அவசியமாகும். பிறவியிலேயே இயல்பான ஆற்றலுடன் ( கருவில் திருவுடைமை )வரும் பிள்ளைகளின் ஆக்க எழுத்துத் திறன்களை முன்னேற்றுவதற்கு வகுப்பறையைப் பொருத்தமான சுற்றாடலாக மாற்றிக் கொள்ளும் பொறுப்பு ஆரம்ப பாடசாலை ஆசிரியரான உங்களுக்குரியது. அதற்கான சில செயற்பாடுகளைக் கீழே தருகிறோம். சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் அவற்றைப் பயன்படுத்த முயற்சி எடுக்க வேண்டும்.

- இரசிக்கும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்த கவிதைகளை ஆக்க வழி காட்டல்.
- படங்களில் சித்திரிக்கப்பட்டவற்றை எழுதுதல்.
- கதைகளை மாற்றி அமைத்தல்.
- ஒழுங்கற்ற முறையில் உள்ள சொற்களைக் கொண்டு கதை அமைத்தல்.
- ஒரு சம்பவத்தின் ஆரம்பத்தைக் கூறிய பின் அதை விபரிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- நாட்குறிப்பை எழுதுதல்.
- நாடகப் பிரதிகளை எழுதுதலும் நடித்தலும்.
- விடுகதைகளையும் விவேகச் சக்கரங்களையும் ஆக்குதல்.
- ஒரு கவிதையின் ஒரு அடியை அல்லது இரண்டு அடிகளைக் கொடுத்து விட்டு மிகுதியைப் பூர்த்தி செய்யும் அப்பியாசங்கள் கொடுத்தல்.

இவற்றை விட ஆக்க முறை எழுத்துக்கான கீழ்க் காணும் செயற்பாடுகள் ஆரம்ப வகுப்புகளுக்கான மிகச் சிறந்த ஊக்குவிப்புகளாகும்.

- தலையங்கங்களை இடுதல்.
- ஆக்கக் கண்காட்சி.
- கவிதை, பாடல்கள் சமர்ப்பித்தல்.
- மேலதிக வாசிப்பு நூல்கள்.
- எதையும் அவதானிக்கும் சந்தர்ப்பங்களை ஏற் படுத்துதல்
- சிறிய கவிதைப் புத்தகங்களை அறிமுகம் செய்தல்.

மேற்கூறிய செயற்பாடுகளைச் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வாறு பயன்படுத்திக் கொள்வது உங்கள் கடமை யாகும்.

ஆக்கங்கள் பெரும்பாலும் சுயமானவையாக இருத் தல் வேண்டும்.

பிள்ளைகளின் ஆக்கத்திறன்களை நல்ல முறையில் செயற்படுத்துவதற்கேற்ற ஊக்குவிப்புகளை ஆரம்ப வகுப்புக்களில் ஏற்படுத்தல் வேண்டும்.

ஆக்கங்களின் அடிப்படை அனுபவமாகும். ஆசிரிய ரின் மொழி ஆக்கத்திறன் பிள்ளையின் மொழியாக் கத்திறனை வளர்க்க ஏதுவாக இருக்கும்.

ஆக்க முறையிலான எழுத்துக்களை இனங்கண்டு கொள்ளவும் அவ்வியல்புகளையுள்ள பிள்ளைகளை அறிந்து கொள்ளவும் ஆசிரியர் முயல வேண்டும்.

செயற்பாடு. 2



பிள்ளையின் ஆக்கத்திறன்களின் சிலவற்றை இங்கே பார்ப்போம்.

1 மூன்றும், நான்காம், ஐந்தாம், ஆறும் ஆண்டு களுள் ஒரு வகுப்பு மாணவர்களைத் தேர்ந்தெ டுத்துக் கொள்க.

2 '' நாங்கள் கவிதை அமைப்போம் '' என்று கூறிப் பிள்ளைகளுடன் கவிதை ஆக்கம் பற்றி யும் அவற்றிற்குரிய தலைப்பு ஒன்றைப் பற்றி யும் உரையாடுங்கள்.

3 கீழ்க்காணும் கவிதையின் மூன்று அடிகளைப்பிள் ளைகளுக்குக் கொடுத்து நான்காவது அடியை பூர்த்தி செய்வியுங்கள்.

மலைகளிடையே சிற்ருறு
மலர்கள் வீசும் நறுமணங்கள்
பலவாம் பறவை பறந்து செல்லும்
..................................................

i பூர்த்தியாக்கப்பட்ட ஒவ்வொரு கவிதையையும் அந்தந்தப் பிள்ளையைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.

ii பின்னர் கீழ்க்காணும வினக்களுக்கு விடை தருக.

உரிய கூட்டினுள் ஆம்/இல்லை என்ற கு...

1 சகல பிள்ளைகளும் கவிதையைப் ... களா?

2 கவிதைகளை ஆக்கப்பிள்ளைகளிடம் ஆர்வம் இ... ததா?

( ) ( )

3 மாணவர்களின் ஆக்கத்திறன்கள் இதனல் வெளிப் பட்டதா?

( ) ( )

4 மாணர்கள் தாம் தயாரித்த கவிதையை வகுப்பில் வாசித்துக்காட்ட முன் வந்தார்களா?

( ) ( )

5 இவைபோன்ற அப்பியாசங்களை இன்னும் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் பிள்ளைகளிடம் காணப் பட்டதா?

( ) ( )

இந்த வினக்களுக்கு இல்லை என்ற விடைகிடைக்கப் பெற்றுல் பொருத்தமான வேருெரு அப்பியாசத்தைச் செய்து பாருங்கள்.

பகுதி iv

## 6.0 எழுத்து மொழியைத் திருத்தம் செய்தல்.

எழுத்து மொழியைத் திருத்தம் செய்தல் என்பது பிள்ளைகள் எழுதியவைகளைச் சரி பிழை பார்த்தல் ஆகும். இது மிகவும் அவசியமான செயலாகும். சரி பிழை பார்த்தல் என்பதை விட எழுத்து மொழியைத் திருத்தம் செய்தல் என்பது பரந்த கருத்துடைய தாகும்.



எழுத்துப் பிழைகளைக் திருத்தம் செய்தலின் முக்கிய நோக்கம் பிள்ளைகளுக்கும் படிக்க் உதவுதல் ஆகும். அச் செயல்கள் பிள்ளைகள் விரும்பக் கூடியதாக அமையின் வேண்டுமென்றால் தமது பிழைகளைத் திருத்திக் கொள்ளப் பிள்ளைகள் பின் வாங்க மாட்டார்கள். ஆகையால் இத்திருத்தங்களின் போது நீங்கள் கவனிக்க வேண்டிய சில விடயங்களை அறிதல் நன்று.

- பிள்ளைகள் தமது பிழைகளைத் தாமாகவே திருத்தஞ்செய்யப் பயிற்சி கொடுத்தல்.
- பிள்ளைகளை ஊக்குவிக்கும் விதத்தில் திருத்த முறைகளை அமைத்துக் கொள்ளல்.
- பிள்ளைகளின் ஆக்கங்களை மீண்டும் வாசிக்கச் செய்து அவர்களே பிழை திருத்தங்களைச் செய் தல்.
- பிள்ளைகள் எழுதியவற்றை வகுப்புக் குழுக்களுக் கிடையே மாற்றி மாற்றிக் கொடுத்து உங்கள் வழிகாட்டலின் கீழ் அவற்றைத் திருத்தம் செய்தல்.
- சிறந்த ஆக்கங்களின் அம்சங்களைச் சோதித்து அவற்றின் அடிப்படையில் தமது ஆக்கங்களை மீண்டும் திருத்தம் செய்ய ஊக்குவித்தல்.
- முன்மாதிரிகளின் மூலம் திருத்தம் செய்தல்.
- ஒரே தரத்தில் எல்லாவற்றையும் அவதானிக் காது சிலசில பகுதிகளைத் தனித்தனியே எடுத்து எழுத்துப் பிழைகளைத் திருத்துதல்.

பகுதி V

## 7.0 எழுத்து மொழியில் ஏற்படும் பிரச்சினைகளும் பரிகாரக் கற்பித்தலும்.

குறைபாடுகள் உள்ள பிள்ளைகளைக் கண்டு அவற்றிற் கான பரிகாரங்களை மேற்கொள்ளுதல்பற்றி இப்பகுதி யில் கவனிப்போம்.

எழுத்தின் பொறிமுறைத் திறன்களும் ஆக்கத்திறன் களும் பிள்ளைக்குப் பிள்ளை வேறுபடும். சில பிள்ளை களின் புலக் குறைபாட்டால் பொறிமுறைத் திறன்கள் வளர்ச்சியில் தாமதம் ஏற்படும். கைகளிலுள்ள தசை

நார்களினதும் நரம்புகளினதும் செயற்பாடுகள் குறைந்த பிள்ளைகளிருந்தால் அவர்களை இனங்கண்டு உங்களால் ஆற்றக் கூடிய உதவிகளைச் செய்யுங்கள். குறைபாடுகள் உச்ச நிலையில் இருந்தால் பெற்றோர் மூலம் ஒரு வைத்தியரை அணுகி ஆவன செய்யுங்கள். உளக் காரணிகளால் மெல்லக் கற்கும் பிள்ளைகளுடன் நீங்கள் மிகப் பொறுமையுடன் செயற்படவேண்டும். இவர்களுக்குத் தண்டனை அளிப்பதோ சட்டங்களை விதிப்பதோ ஆகாது. மொழிச் செயற்பாடுகள் மாத்திரமல்ல ஏனைய பாடங்களைக் கற்கும் போதும் அவர்களின் ஊக்கம் குறைவாக இருக்கக்கூடும் ... குறைந்த தரங்களிலாவது அவர்களின் ... பீடு செய்வது நன்று. சொற்களை ... பதிலாக படங்களை வரைதல் போன் ... காட்டுதல்களை மேற்கூறிய பிள்ளைகள ... நாங்கள் திருப்தியடைய வேண்டும். ஏ... விடக்கூடிய வளர்ச்சி வேகத்தை அந்த மாணவ... எதிர்பார்க்க முடியாது.

எழுத்தில் ஊக்கம் குறைந்த பிள்ளைகளை ஊக்குவிக்கும் உபாயங்களை கையாளலாம். எழுத வேண்டியதன் தேவையை நாங்கள் பிள்ளையிடம் ஏற்படுத்த வேண்டும். உண்மையான பின்னணி அநுபவங்கள், மகிழ்ச்சியை அளிக்கும் சந்தர்ப்பங்கள் விளையாட்டுக்கள் போன்றவற்றால் ஊக்கம் குறைந்த பிள்ளைகளை ஊக்குவிக்கலாம்.

ஆக்க எழுத்தில் விசேட திறன்கள் உள்ள பிள்ளைகளுடன் ஏனையோரையும் இணைத்து செயற்பட விடுவது பொருத்தமானது. விசேடமாக எழுத்துச் சம்பந்தப்பட்ட குழுச் செயற்பாடுகள் இவற்றில் முக்கியமாகும். சுவர்ச் செய்தித்தாள், மாணவர் சஞ்சிகைகள், மாணவ ஆக்கங்கள் உட்பட செய்தித்தாள்கள், கட்டுரைகள் சேகரிப்பது போன்ற கூட்டுச் செயல்கள் ஆக்க எழுத்துக்குப் பிள்ளையை ஊக்குவிக்கும் சில செயற்பாடுகளாகும். இவை இப்போது பாடசாலைகளில் செயல்முறை மொழிச் செயற்பாடுகளாக மேற்கொள்ளப்படுகின்றன. இவை போன்ற எழுத்துப் பிரச்சினைகள் தோன்றும் சந்தர்ப்பங்களில் அந்நிலைக்கேற்ற பரிகாரக் கற்பித்தலை அமைத்துக் கொள்ளுங்கள். பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கலந்துரையாடித் தீர்வு காணுங்கள்.

## 10.0 பொழிப்பு

இந்த மொடியூலின் இடம் பெறும் விடயங்களைச் சுருக்கிக் கூறுவோம்.

எழுத்து, கருத்து வெளியிடும் ஓர் சாதனமாகும்.

பாடசாலைக்குப் பிரவேசித்த நாள் தொடக்கம் பிள்ளையை எழுத்துப் பயிற்சிககு இட்டுச் செல்லும் வகையில் கவனம் செலுத்த வேண்டும்.

ஆரம்ப பாடசாலையிலிருந்தே எழுத்துக்கான ஆயத்த நிலையை ஏற்படுத்த வேண்டும்.

எழுத்தின பொறிமுறைத்திறனும் ஆக்கத்திறனும் என்ற இரு பிரிவையும் வளர்ப்பதற்கான அடித்தளம் இடுபவர் ஆரம்ப பாடசாலை ஆசிரியராவார் இத்திறன் களை குறைந்த அளவோ கூடிய அளவிலோ வளர்த்தல் அந்தந்த மாணவனின் தனித்துவத்திற்கேற்ப அமை யும். பிள்ளைகள் எழுதுவதை திருத்தம் செய்தல் அவர் களை ஊக்குவிக்கும் செயற்பாடாகும். இதனுல் பிள்ளை கள்பிழைகளைத் திருத்திக் கொள்ள ஆர்வம் காட் டுவர்.

எழுதுவதில் பிரச்சனையுள்ள மாணவர்களை அறிந்து உரிய பரிகாரங்களைத் தேடுவது ஆரம்ப வகுப்பு ஆசிரி யரின் கடமையாகும்.

## 9.0 பிற்சோதனை

இந்த பிற்சோதனைகு விடை அளிப்பதன் மூலம் மொடியூ லில் எதிர்பார்த்த குறிக்கோளை நீங்கள் அடைந்திருக்கிறீர்களா என்று பாருங்கள்.

கீழ்க்காணும் செயல்கள் பொறிமுறைத்திறன் தொடர் பாக இருந்தால் அவற்றின் முன்னே 'பொ' வையும் ஆக்கம் தொடர்பாக இருந்தால் '' ஆ '' வையும் எழு துங்கள்.

1 எழுத்துக்களைத் தெளிவாக எழுதுதல்.

2 நான் ஒரு விமான ஓட்டியாக இருந்தால் என்ற தலைப்பில் கட்டுரை.

3 உவமானங்களை உபயோகித்து எழுதுதல்.

4 சுவர்க் கரும்பலகையில் எழுதுதல்.

5 படங்களைப் பார்த்துக் கதைகளை எழுதுதல்.

6 எழுத்துக்கு மேல் எழுதுதல்.

7 பார்த்தெழுதல்

8 நகைச்சுவைத் துணுக்குகளை எழுதுதல்.

9 கடதாசியில் குஞ்சங்களை வெட்டுதல்.

10 விடுகதை

11 மண்ணைப் பிசைதல்

12 செய்திகளை எழுதுதல்.

13 மண்பலகையில் எழுதுதல்.

14 சித்திரக்கதைகள் எழுதுதல்.

15 பாட்டு எழுதுதல்.

கீழ்க்காணும் கூற்றுக்கள் சரியாயின் ✓ எனவும் பிழையெனில் × எனவும் அடையாளம் இடுக.

1 வரைதலும், வெட்டுதலும் ஒட்டுதலும் எழுத்து முன் பயிற்சியாகும்.

2 கொடுக்கப்பட்ட படங்களின் ... எழுதுதல் பாலர் வகுப்புப் பிள் ... குப் பொருந்தமான அப்பியாச...

3 மூன்றும் ஆண்டுப் பிள்ளைகளுக்கு பூரணமான படத்தை விவரித்து எழுதுவதற்கு இயலும். ( )

4 ஆசிரியரின் ஆக்கத்திறன்கள் பிள்ளையின் ஆக்கத்திறன்களை வளர்க்க உதவியாக இருக்கும். ( )

5 இடது கையால் எழுதும் பழக்கமுடைய பிள்ளைக்கு வலது கையால் எழுதும்படி வற்புறுத்தக் கூடாது. ( )

6 பிள்ளைகள் எழுதுவதில் ஆர்வம் காட்டுவது ஊக்கம் இருக்கும் சந்தர்ப்பத்திலாகும். ( )

7 வாசிக்கும், கேட்கும், பார்க்கும் பிள்ளைக்கு எழுத பல விடயங்கள் உண்டு. ( )

8 பிள்ளை எழுதுவதை ஆசிரியர் மதிப்பீடு செய்தல் வேண்டும். ( )

9 எழுதுவதில் குறைபாடுகள் உள்ள பிள்ளையும் அவற்றில் ஆக்க குறைந்த எதனையாவது அடையச் செய்ய வேண்டும். ( )

10 பின்னூட்டல் எழுத்தில் குறைபாடு காணும் பிள்ளைகளுக்குச் சிறந்த பரிகாரமாகும். ( )

உங்கள் விடைகளை மொடியூலின் இறுதியில் உள்ள விடைகளுடன் ஒப்பிடுக.

தற்போது நீங்கள் இந்த மொடியூலைப் படித்து முடித்து விட்டீர்கள். இவற்றைச் சிறப்பாக கற்றுள் ளீர்களா என்று பரிசோதிப்பது பின்வரும் ஒப்படை யிலாகும். இவற்றிற்கு விடை எழுதி தொலைக் கல்வி நிறுவகத்திற்கு அனுப்பவும்.

## 10.0 ஒப்படை

1) நியமமான எழுத்துப் பயிற்சியைத் தொடங்குவதற்கு முன்னர் பிள்ளையை முன் ஆயத்தம் செய்வ தற்காகச் சிறப்பானது என நீர் கருதும் குறைந்தது பத்துசெயற்பாடுகளையும், அவற்றை உமது பாட சாலையில் செயன்முறைப்படுத்த உதவும் இலகு வான வழிவகைகளையும் கூறுக ?

2) "எழுத்தின் பொறிமுறைத்திறனையும் ஆக்கத்திறனை யும் வளர்ப்பதற்கான தளம் இடுபவர் ஆரம்பப் பாடசாலை ஆசிரியராவார்". இக்கூற்றினை தகுந்த ஆதாரங்களுடன் நிறுவுக.

## 11.0 மேலதிக வாசிப்பு நூல்

ஆண்டு 1 ஆசிரியர் கைந்நூல் கற்றல் உதவி 1 – 2 இல் இடம் பெறும் எழுத்துக்களுடன் விளையாட்டு.

ஆரம்ப மேல் வகுப்புகளுக்குரிய ஆசிரியர் கைந்நூல் பாடவிதான அபிவிருத்தி.

நிலைய வெளியீடு 1 – 5 வரையிலான பாடத் திட்டங் கள்,

## 12.0 விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1 | √ | 5 | √ |
| 2 | √ | 6 | √ |
| 3 | √ | 7 | √ |
| 4 | × | 8 | √ |

செயற்பாடு 1

1 கத்தரிக்கோலால் கடதாசிகளில் குஞ்சம் வெட் டுதல்.

2 வெட்டப்பட்ட எழுத்துகளில் எழுதுதல்

3 எழுதப்பட்ட எழுத்துகளின் மேல் எழுதுதல்.

4 சுவர்க்கரும்பலகையில் எழுதுதல்.

5 கடதாசியில் பந்து, மாலை ஆகியற்றை வரைதல்.

6 சொற்களைப் பார்த்தெழுதல்.

7 படத்துக்கேற்ற சொல்லை எழுதுதல்.

8 பட அட்டைக்குப் பொருத்தமான சொல்லை எழுதுதல்.

9 சொற்களை நினைவில் வைத்து எழுதுதல்.

10 சிறிய வசனங்களை எழுதுதல்.

**செவ்வை பார்த்தல் 1**

| | | | |
|---|---|---|---|
| 1 | √ | 6 | √ |
| 2 | √ | 7 | √ |
| 3 | √ | 8 | √ |
| 4 | √ | 9 | √ |
| 5 | × | 10 | × |

**செவ்வைபார்த்தல் 2**

| | | | |
|---|---|---|---|
| 1 | √ | 5 | √ |
| 2 | √ | 6 | √ |
| 3 | × | 7 | √ |
| 4 | √ | 8 | √ |

**பிற்சோதனை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | பொ | 6 | பொ | 11 | பொ |
| 2 | ஆ | 7 | பொ | 12 | ஆ |
| 3 | ஆ | 8 | ஆ | 13 | பொ |
| 4 | பொ | 9 | பொ | 14 | ஆ |
| 5 | ஆ | 10 | ஆ | 15 | ஆ |

| | | | |
|---|---|---|---|
| 1 | √ | 6 | √ |
| 2 | √ | 7 | √ |
| 3 | √ | 8 | √ |
| 4 | √ | 9 | √ |
| 5 | √ | 10 | √ |

குறிப்பு

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

PRINTED BY: UNITED MERCHANTS LTD. COLOMBO-13, SRI LANKA.